மகாவித்துவான், சிந்தாமணிச் செல்வர்

மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

நூற்றாண்டு விழா

(1896-1996)

வாழ்க்கைக் குறிப்பு

©

தமிழ் வளர்ச்சித் துறை

1997

மகாவித்துவான், சிந்தாமணிச் செல்வர்

மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

நூற்றாண்டு விழா

(1896-1996)

வாழ்க்கைக் குறிப்பு

முனைவர்
மு. தமிழ்க்குடிமகன்
தமிழ் ஆட்சிமொழி-தமிழ்ப்
பண்பாட்டுத்துறை அமைச்சர்

சென்னை
19-2-1997

அணிந்துரை

தமிழறிஞர் மே. வீ. வேணுகோபாலர் அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அதனை ஒட்டியே இச்சிறு வெளியீடு உங்கள் கைகளில் தவழ்கின்றது. திரு. வி. க. காலத்தில் வாழ்ந்து பல வகையான தமிழ்ப் பணிகளைச் செய்தவர் மே.வீ.வே. அதிலும் இறையனார் களவியலுரை, தொல்–நச்சினார்க்கினியர் உரை, யாப்பருங்கலக்காரிகை போன்ற நூல்களைச் செப்பமாகப் பதிப்பித்துள்ளார். இவ்வளவு வளர்ந்து கணிப்பொறி அச்செல்லாம் வந்தால்கூடப் பல நூல்களில் ஏராளமான பிழைகள் இடம்பெறத்தான் செய்கின்றன. பிழையின்றி எதையும் செப்பமாகச் செய்ய வேண்டும் எனும் முறையில் பணியாற்றிச் செம்மையாக வாழ்ந்தவர் அவர்.

மேலும் மே. வீ. வே. அவர்களின் உரைநடைச் சிறப்பைக் குறித்துத் திரு. வி. க. அவர்களே பெரிதும் பாராட்டியுள்ளார்கள்.

"மே.வீ.வே. அவர்களின் பிழையற்ற உரைநடை, தற்போது கறைபட்டுள்ள தமிழுலகைத் தூய்மை செய்யும் பெற்றி வாய்ந்தது."

முதிர்ந்த காலத்தில் இலக்கணப் பெரும் புலவராகத் திகழ்ந்து தமிழுலகுக்கு வழிகாட்டினவர். குறிப்பாக நாக்கு + கள் என்றால் நாக்குகள் என்று வரும். ஆனால் எழுத்து + கள் என்றால் எழுத்துக்கள் என்று வரும். இந்த இரட்டை நிலை கூடாது என்று இரண்டையும் ஒருமுகப்படுத்தியவர் அவர்தான். எனவே நாக்குகள் போலவே 'எழுத்துகள்' வரவேண்டும் எனும் இலக்கண வழிகாட்டியாகவே திகழ்ந்தார் மே. வீ. வே.

ஆர்வத்தால் தமிழ்ப் பயின்று அனைவர்க்கும் வழிகாட்டியாகும் அளவுக்கு வளர்ந்து செப்பமான பல தமிழ்ப்பணிகளைச் செய்து மறைந்த மே.வீ.வே. தமிழுணர்ந்தவர் நெஞ்சில் நிறைந்து நிற்கிறார்.

மு. தமிழ்க்குடிமகன்

பதிப்புரை

தமிழுக்குத் தொண்டு செய்த பெருமக்களை நன்றியுடன் நினைவு கூர்ந்து போற்றுவதனைக் கடப்பாடாகக் கொண்ட தமிழ்நாடு அரசு 'சிந்தாமணிச் செல்வர்', 'இலக்கணத்தாத்தா' மே. வீ. வேணுகோபாலரின் நூற்றாண்டு விழாவினை அரசு விழாவாகத் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாகக் கொண்டாட ஆணை பிறப்பித்துள்ளது. அதன் அடிப்படையில் தமிழறிஞர் மே. வீ. வேணுகோபாலருக்கு நூற்றாண்டு விழா எடுக்கப் பெறுகின்றது.

தமிழறிஞர் மே. வீ. வேணுகோபாலர் தம் வாழ்நாள் முழுவதையும் தமிழ்ப்பணிக்களித்த பெருந்தகையர். தமிழ் கூறு நல்லுலகில் 'சிந்தாமணிச் செல்வர்', 'செந்தமிழ்க் களஞ்சியம்', 'இலக்கணத்தாத்தா' என்றெல்லாம் போற்றிப் புகழப் பெறுபவர். பதிப்புத் துறையில் அழியாத்தடம் பதித்த ஆற்றலாளர். அவர் ஆற்றிய அருந்தமிழ்ப் பணிகள் இன்றளவும் தமிழ்ப் பயில்வோர்க்கும், தமிழ் நூல்களைப் பதிப்பிப்போர்க்கும் வழிகாட்டி நிற்கின்றன. தமிழ்மொழி மேம்பாடு அடைய ஒல்லும் வகையெல்லாம் ஓயாத் தொண்டாற்றிய திரு. மே.வீ.வே. அவர்களின் வரலாற்றையும், பெரும்பணிகளையும் இன்றைய தலைமுறையினர் அறிய வேண்டுவது இன்றியமையாததாகும். அம்முறையில் இச்சிறு கையேடு வெளியிடப்பெறுகின்றது.

இதனைத் தொகுக்க நூல்களையும், குறிப்புகளையும் அளித்து உதவிய திரு. மே. வீ. வே. அவர்களின் புதல்வர் பேராசிரியர் மே.வே. சக்கரவர்த்தி அவர்களுக்கும் கவிஞர் வி. மு. உலகநாதன் அவர்களுக்கும் காஞ்சி கு. மாதவப்பிள்ளை அவர்களுக்கும் எம் நன்றி உரியவாகுக.

தமிழ் வளர்ச்சி இயக்குநர் (பொ.)

மகா வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

வாழ்க்கைக் குறிப்பு

மகாவித்துவான் சிந்தாமணிச் செல்வர், செந்தமிழ்க் களஞ்சியம், கலைமாமணி மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்கள் துன்முகி ஆண்டு, ஆவணித் திங்கள் 17 ஆம் நாள் (31-8-1896) திங்கட்கிழமை பிறந்தார். தந்தையார் திரு. மேட்டுப்பாளையம் வீராசாமிப் பிள்ளை; தாயார் திருமதி. பாக்கியம் அம்மையார். மே. வீ. வே. அவர்களின் தமையன்மார் நால்வர்; தமக்கையார் இருவர்; தங்கையார் ஒருவர். தமையன்மாருள் இருவரும் தமக்கையார் இருவரும் மறைந்தனர்.

திரு. மேட்டுப்பாளையம் வீராசாமிப் பிள்ளையின் பிறப்பிடம் சென்னையை அடுத்த சைதாப்பேட்டை மேற்கில் உள்ள மேட்டுப்பாளையம் என்னும் சிற்றூராகும். தம் மக்களின் கல்வியைக் கருதிச் சைதாப்பேட்டை பாலாஜி சிங்குத் தெருவில் பெரியதோர் இல்லத்தை வாங்கி, அதிற் குடிபுகுந்தார். மே.வீ.வே. அவர்களுக்கு ஐந்தாண்டு நிரம்பியதும், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியைச் சார்ந்த மாதிரிப் பள்ளியில் சேர்த்தனர். அப்பள்ளியில் ஓராண்டு பயின்றார்.

குடும்பத்தில் வறுமை கால்கொண்டது. மே.வீ.வே. அவர்கள் திண்ணைப் பள்ளிக்கூடம் ஒன்றில் சேர்க்கப்பட்டார். குடும்பத்தில் இன்னல்கள் ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்ந்து குடிபுகுந்தமையால், நாற்பதினாயிரம் உருபாய் விலை மதிக்கத் தகுந்த தம் இல்லத்தைத் திரு. வீராசாமிப் பிள்ளை இரண்டாயிரம் ரூபாய்க்கு விற்றார். தம் குடியிருப்பையும் பல்லவபுரத்திற்கு மேற்கில் உள்ள எருமையூருக்கு மாற்றினார். அங்கு தம் நிலத்தில் வேளாண்மை செய்தார். வானம் வளங்குன்றியதால் பஞ்சம் நிலவி, இக்குடும்பம் மீண்டும் குடிபெயரலாயிற்று. சென்னைப் புரசைப்பாக்கத்தில் ஓர் இல்லத்திற்கு திரு. வீராசாமிப் பிள்ளையின் குடும்பம் குடியேறியது.

மே. வீ. வே. அவர்களுக்குக் கல்வி கற்பதில் எல்லையில்லாத ஆர்வம் இருந்தது. ஆதரிப்பார் இல்லை. பள்ளியிற் சேர்ந்து பயிலும் பேறு பெறாத மே.வீ.வே. அவர்கள், கையிற் கிடைத்த தமிழ் நூல்களைக் கருத்தூன்றிப் படித்து வந்தார். மூன்று உருபாய் ஊதியத்திற்குச் சென்னை வேபபேரியிலுள்ள எஸ்.பி.ஸி.கே. அச்சகத்தில் (தையோசீசன் பிரஸ்) அச்சுத் தேய்க்கும் வேலையில் அமர்த்தப்பட்டார். காலை எட்டு மணி முதல் மாலை ஐந்து மணி வரையில் ஓயாது உழைத்தார். அறிஞர்கள் சிலர் சேர்ந்து நடத்திய இரவுப் பள்ளியிற் சேர்ந்து ஓய்வு நேரத்தையெல்லாம் கல்வி பயில்வதிலேயே கழித்து வரலானார். கருத்தூன்றிக் கல்வி கற்றமையால் சில பரிசுகளும் பெற்றார்.

மே. வீ. வே. அவர்களுக்கு ஆஙகிலத்திலும் அருந்தமிழிலும் பெருந்துணையாய் நின்று கல்வி பயிற்றிய வழக்கறிஞர் திரு. டி என். சேஷாசலம் ஐயர் பி.ஏ.,பி.எல். அவர்கள் மே. வீ. வே. அவர்களிடம் தமிழில் பேரார்வம் இருப்பதை உணர்ந்து, அவரைத் தககாரை நாடித் தனித்தமிழ்ப் பயிலும்படிக் கூறினார்.

மே. வீ. வே. அவர்களுக்கு ஆங்கிலம் பயிற்றிய ஆசிரியருள் திரு.வி.ஆர். அரங்கநாத முதலியாா (சென்னைக் கல்வித் துறைத் துணை இயககுநராகப் பணியாற்றியவர்), திரு. கே. மாசிலாமணி முதலியார், திரு. சி. நமச்சிவாய முதலியார், வழக்கறிஞர் திரு. எம். தாமோதர நாயுடு, திரு. மோகனரங்கம் பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

கல்வி உயர உயர மே. வீ. வே. அவர்கள் மேற்கொண்ட அலுவல்களும் மாறின. சிறிது காலம் வேப்பேரியிலுள்ள அஞ்சலகத்தில் ஏவலனாய் அமர்ந்து பணிபுரிந்தார்; சிறிது காலம் வழக்கறிஞர் ஒருவரிடம் தூக்குத் தூக்கியாய்ப் பணிபுரிந்தார்; சிறிது காலம் மற்றொரு வழக்கறிஞரிடம் எழுத்தராகத் தொண்டாற்றினார்; சிறிது காலம் ஆயுள் ஒப்பந்த அலுவலகம் ஒன்றில் எழுத்தராகப் பணிபுரிந்தார். இவரிடம் அமைந்திருந்த நல்லொழுக்கத்தால் அலுவல் ஏற்ற இடங்களிலெல்லாம் அனைவர் மதிப்பிற்கும் அன்பிற்கும் ஆதரவிற்கும் உரியவராய்த் திகழ்ந்தார்.

மே. வீ. வே. அவர்கள், அந்நாளில் சென்னையில் இலக்கிய இலக்கணங்களில் வல்லுநராய், நல்லாசிரியராய் விளங்கிய தமிழ்ப் பேராசிரியர் கா. ர. கோவிந்தராச முதலியார் அவர்களை அணுகி அவரிடம் இலக்கிய இலக்கணங்களை முறைப்படி கற்றார். கற்றார் குழுமும் அவைகளில் இடம்பெறும் தகுதியுடையவரானார். அந்நாளில் மே.வீ.வே. அவாகளுடன் தமிழ்ப் பெரும்புலவர் மங்கலங்கிழார் (திரு. மங்கலம் குப்புசாமி முதலியார்), தமிழ்ப் பேரறிஞர் திரு. கு. மதுரை முதலியார், திரு. வே.த. அருச்சுன முதலியார் ஆகியோரும் தமிழ்ப் பயின்றனர். இப்பெருமக்களுடன் மே. வீ. வே. அவர்கள் இடையறா நட்பு பூண்டிருந்தார்.

தமிழ்த்தாய்க்கும் ஆங்கிலவாணிக்கும் நன்மகவாயும் நல்லன்பனாயும் திகழும் நோக்குடன் மே.வீ.வே. அவர்கள், இரு மொழியிலும். ஏற்றம் பெற்று விளங்கும் நூல்களை ஓய்வு கிட்டும் போதெல்லாம் பயின்றாா. இப்பயிற்சியையே இணையிலா இன்பமாய்க் கருதினார்.

மே. வீ. வே. அவர்கள் 1920 ஆம் ஆண்டு தொடங்கி 1923 ஆம் ஆண்டு வரையில் சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். அந்நாளில் திரு. மணி திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் இப்பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராகவும், திருவாளர்கள் தணிகாசலம் பிள்ளை, மயிலை சிவ. முத்துககுமாரசாமி முதலியார், பாலூர் வேலுதேசிகர், எஸ். எஸ். அருணகிரிநாதர், சதாசிவநாயகர் ஆகிய அறிஞர்கள் மே. வீ. வே. அவர்களுடன் உதவித் தமிழாசிரியர்களாகவும் பணியாற்றினர்.

சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் மே.வீ.வே. அவர்கள் உதவித் தமிழாசிரியராய்ப் பணியாற்றிய காலத்தில், புரசைப்பாக்கம் லுத்தரன் மிஷன் பெப்ரீஷியஸ் நடுத்தரப் பள்ளியின் தலைமையாசிரியர் திரு. எம். ஏ. வேதநாயகம் அவர்கள், தம் பள்ளியில் தமிழாசிரியராய் அமர்ந்து தொண்டு புரியுமாறு மே. வீ. வே. அவர்களிடம் வேண்டினார். வேணடுகோளை ஏற்று மே. வீ. வே. அவர்கள் அப்பள்ளியின் தலைமைத் தமிழாசிரியரானார். மே. வீ. வே. அவர்கள் வேலையேற்ற பின்னர் நடுத்தரப்பள்ளி உயர்நிலைப பள்ளியாயிற்று. மே.வீ.வே. அவர்கள் சென்னைப்

பல்கலைக் கழகத்தார் நடத்திய வித்துவான் தேர்வில் தேறிப் பட்டதாரியானார். ஜெர்மானியப் பாதிரியார்கள் அப்பள்ளியின் மேற்பார்வையாளர்களாக இருந்தனர். அப்பாதிரியார்கள் தமிழில் சிறந்த புலமை பெற்றிருந்தனர். அவர்களின் கூட்டுறவால் மே. வீ. வே. அவர்களுக்குப் பள்ளியில் இருந்த மதிப்பும் செல்வாக்கும் பன்மடங்கு பெருகின. வேறு எப்பள்ளியிலும் ஒரு தமிழாசிரியருக்கு அத்தகைய பெருமதிப்பும் செல்வாக்கும் கிடைத்திராது என்றே கருதலாம்.

ஜெர்மனியிலிருந்து வந்த அந்நாட்டு அறிஞர் சிலரும் அவர்தம் மனைவியரும் மே.வீ.வே. அவர்களிடம் தமிழ்ப் பயின்றனர். இவ்வாறு தமிழ்ப் பயின்றவருள் டாக்டர் ஸ்டாலின், அவர்தம் மனைவியார், டாக்டர் டபிள்யூ. கிராபே, குமாரி ஹில்கார்டு எல்வின் அம்மையார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். பெப்ரீஷியஸ் பள்ளியின் தொடர்புடைய பாதிரியார்களால் சென்னைக் கீழ்ப்பாக்கத்தில் குரு குழுக் கல்லூரி (Gurukul College) ஒன்றும் நடத்தப் பெற்று வந்தது. அக்கல்லூரியில் மதத் தொண்டில் பயிற்சி பெறுபவர்களுக்குத் தமிழிலுள்ள சைவ வைணவ நூல்கள் சிலவற்றைப் பயிற்றும் தொண்டிலும் மே. வீ. வே. அவர்கள் ஈடுபட்டார். 1938 ஆம் ஆண்டு ஆசிரியத் தொழிலை விட்டு நீங்கினார்.

ஆசிரியத் தொழிலை விட்ட பின்பு எழுத்து வேலையும் பதிப்புத் தொழிலுமே மே.வீ.வே. அவர்களை உயர்த்தின. தொடக்கப் பள்ளியிலும் உயர்நிலைப் பள்ளியிலும் மாணவர்களுக்கெனவே பல நூல்களை எழுதினார். அந்நூல்களின் வழியாகப் பல்லாயிரக்கணக்கான தமிழ் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அறிமுகமானார். இவர் எழுதிய நூல்களைப் பல இதழ்களும் மதிப்புரை வழங்கிப் பாராட்டின. இவ்வகையில் மே.வீ.வே. அவர்கள் படைத்த நூல்களுள் 'அரிச்சந்திர புராணச் சுருக்கம்' என்னும் உரைநடையிலமைந்த நூலும் ஒன்றாகும். இந்நூலைப் பற்றித் தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்கள் 1938 ஆம் ஆண்டில் ஏப்பிரல் திங்கள் 8 ஆம் நாள் நவசக்தி இதழில் வெளியிட்ட மதிப்புரையின் சில பகுதிகள் ஈண்டு கருதி மகிழத் தக்கன.

"......... தீந்தமிழ்ச் சொற்களாலும் சொற்றொடர்களாலும் அமைந்துள்ள உரைநடையைக் கொண்ட கதைச் சுருக்கம், ஒரு பூங்காவெனப் பொலிகிறது. அதனிடைத் தென்றற் காலும் வீசுகிறது. திரு. வேணுகோபாலர் தமிழில் தமிழூர்தல் வெள்ளிடைமலை. தமிழறிஞர் வேணுகோபாலரின் பிழையற்ற உரைநடை, தற்போது கறைபட்டுள்ள தமிழுலகைத் தூய்மை செய்யும் பெற்றி வாய்ந்ததென்று சுருங்கக் கூறலாம்."

தமிழ் நூல்கள் - சிறியவையாயினும் பெரியவையாயினும் - பிழையின்றித் திருத்தமான முறையிற் கண்கவர் வனப்புடன் வெளிவருதல் வேண்டும் என்பதே மே. வீ. வே. அவர்களின் வாழ்க்கைக் குறிக்கோளாக இருந்தது. ஆதலின் பதிப்புத் துறையில் இயன்றவகையில் தொண்டாற்றும் பெரு நோக்கத்துடன், அத்துறையில் அறிவை வளர்க்கும் ஆங்கில நூல்கள் பலவற்றை மே.வீ.வே. அவர்கள் பயின்றார். பதிப்புத் துறை நுட்பங்களை நன்கறிந்த வல்லுநராய்த் திகழ்ந்தார். இவ்வகையில் பதிப்புத் துறையில் பெயர் நிலைக்கும் வண்ணம் அவர் பதிப்பித்த நூல்கள் விவரம் வருமாறு:.

1. இறையனார் அகப்பொருளுரை
2. தொல்காப்பியம் — சொல்லதிகாரம் நச்சினார்க்கினியர் உரை
3. யாப்பருங்கல விருத்தியுரை
4. யாப்பருங்கலக் காரிகை
5. விசாகப் பெருமாள் தமிழிலக்கணம்
6. தமிழ் அன்றும் இன்றும்
7. தஞ்சைவாணன் கோவை — விளக்கக் குறிப்புரை
8. சித்தர் ஞானக்கோவை (அருஞ்சொற்பொருளகராதி முதலிய பிறசேர்க்கைகளுடன்)

பதிப்புத் துறையில் அழியாத் தடம் பதித்த மே. வீ. வே. அவர்கள் சொற்பொழிவாற்றுவதிலும் வல்லவராய் விளங்கினார். திரு. மணி திருநாவுக்கரசு முதலியார் தலைமையில் சென்னைத் தொண்டை மண்டலம் துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளியின்

பெற்றோர் விழாவில் மே.வீ.வே. தம் முதற் சொற்பொழிவை நிகழ்த்தினார். பின்னர் தமிழ்நாட்டில் பற்பல இடங்களிலும் சொற்பொழிவாற்றினார். 1931 ஆம் ஆண்டில் சென்னை இலயோலாக் கல்லூரியில் மாணவர் தமிழ்க் கழக ஆண்டு விழாவில் நிகழ்த்திய சொற்பொழிவும் 1948 ஆம் ஆண்டில் மன்னார்குடியில் நடைபெற்ற தமிழ்த் திருநாளில் பேரறிஞர் அண்ணா அவர்களுடன் இணைந்து ஆற்றிய சொற்பொழிவும் குறிப்பிடத்தக்கன.

மே.வீ.வே. அவர்களுக்கு 1924 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 5 ஆம் நாள் திருமணம் நிகழ்ந்தது. திருமதி. ஜானகியம்மையார் வாழ்க்கைத் துணைவியாய் அமைந்தார். மூன்று புதல்வர்க்கு அன்னையாய் விளங்கி, 1950 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 27 ஆம் நாள் ஜானகி அம்மையார் மண்ணுலக வாழ்வை நீத்தார். மே. வீ. வே. அவர்களின் புதல்வர் மூவர். அவர்களுள் திரு. மே. வே. சீனிவாசன், திரு. மே. வே. சக்கரவர்த்தி இருவரும் சென்னைப் புரசைப்பாக்கத்தில் குடும்பத்துடன் வாழ்ந்து வருகின்றனர். மற்றொரு புதல்வர் மே. வே. கிருஷ்ணமூர்த்தி இரண்டாண்டு நிறைவதற்குள் இறந்தார்.

சென்னையில் சிறப்புற வாழ்ந்த மே.வீ.வே. அவர்களின் குடும்பம் இரண்டாம் உலகப் பெரும் போர்க் குழப்பத்தின் விளைவாகக் காஞ்சீபுரத்திற்குக் குடிபெயர நேர்ந்தது. கச்சியம்பதிப் பெருமக்கள் காட்டிய கனிவும் அன்பும் மே. வீ. வே. அவர்களின் குடும்பத்தைக் கச்சியம்பதியில் நிலைபெறச் செய்தது. கச்சியம்பதியில் மே.வீ.வே. அவர்களிடம் மாணவாகள் பலர் தமிழ்ப் பயின்று வித்துவான் பட்டமும் பெற்று மே. வீ. வே. அவர்களுக்குப் பெருமை சேர்த்தனர். கச்சியம்பதியில் வாழ்ந்த ஜீவபந்து ஸ்ரீபாலர் அவர்கள் மே.வீ.வே. அவர்களிடம் தமிழ்ப் பெருங்காப்பியமான சீவக சிந்தாமணியைச் சொற்பொழிவாற்ற வேண்டினார். அதன்படி மே. வீ. வே. அவர்கள் கச்சியம்பதி ஜைனத் தமிழ்க் கழகச் சார்பில் ஞாயிறுதோறும் சீவக சிந்தாமணி சொற்பொழிவை மூன்றாண்டுகள் நிகழ்த்தி முடித்தார். இப்பெருந்தொண்டினைப் பாராட்ட அன்பர்கள் பலரும் ஜைனக் கழகச் செயலாளரும் விழா எடுத்தனர். விழாவில் சிந்தாமணிச் சொற்பொழிவு நினைவு மலர் ஒன்று வெளியிடப்பட்டது. மே. வீ. வே. அவர்களுககுப் புத்தாடைகளையும் விலைமிக்க 'பார்க்கர் பேனா'வையும் வழங்கிப் பாராட்டினர்.

சிந்தாமணிச் சொற்பொழிவு நினைவு மலருக்கு 'நன்மொழி' என்னும் பொன்மொழிக் கட்டுரை வழங்கிய தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள்,

"வகுப்பை நடாத்திய மகாவித்துவான்
மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களுக்கு
எனது வாழ்த்து உரியதாகுக! அவரைச்
'சிந்தாமணிச் செல்வர் வேணுகோபாலப் பிள்ளை'
எனத் தமிழ்நாடு இனி வழங்குவதாக"

என அக்கட்டுரையிற் குறிப்பிட்டதைப் போற்றி அன்று முதல் மே.வீ.வே. அவர்களைத் தமிழ்கூறு நல்லுலகம் 'சிந்தாமணிச் செல்வர்' என்றே அழைத்து மகிழ்கிறது.

சென்னையில் புரசைப்பாக்கத்தில் நடைபெற்றுவந்த கம்பர் கழகத்தில் மே.வீ.வே. அவர்கள் தம் ஆசிரியருடன் இணைந்து தமிழ்த் தொண்டு புரிந்தார். சென்னை ஸ்ரீவைஷ்ணவ மகா சங்கம் ஆண்டுதோறும் நடத்திய சொற்பொழிவு நிகழ்ச்சிகளில் பல்லாண்டுகள் கலந்துகொண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்திப் பாராட்டுகளையும் பெற்றார்.

கச்சியம்பதியில் வாழ்ந்தபோது காஞ்சிமடத்திற்கு வருகை தந்த பேராசிரியர் விபுலானந்த அடிகளாரின் தொடர்பு மே. வீ. வே. அவர்களுக்குக் கிட்டியது. பேராசிரியர் விபுலானந்தர் மே. வீ. வே. அவர்களைப் பற்றி ஸ்ரீமடத்தின் அதிபரிடம் கூறிய நன்மொழிகளால் காஞ்சி மடத்திற்குத் தொண்டாற்றி நற்பெயர் பெற்றார்.

சென்ற இடமெல்லாம் காலத்தால் அழியாத தமிழ்த் தொண்டால் பெரும்புகழ் பெறற மே. வீ. வே. அவர்கள் பதிப்பித்த நூல்களும், இயற்றிய நூலகளும், மேற்கொண்ட ஆய்வுகளும் பலவாகும். முன்பே கூறியபடி இலககண நூல்களைப் பதிப்பித்தது மட்டுமன்றி,

1. அட்டப்பிரபந்தம் – விளக்கக் குறிப்புரை
2. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்
3. நளவெண்பா

4. குசேலோபாக்கியானம் — குறிப்புரை
5. விநோதரசமஞ்சரி
6. பஞ்சதந்திரம் — உரைநடை
7. பஞ்சதந்திரப் பாடல்கள்
8. நீதி நூல்கள்
9. இளைஞர் தமிழ்க் கையகராதி
10. திருவாய்மொழி ஈட்டு வியாக்கியானம் 10 பகுதிகள்
11. திருக்குறள் — சொர்ணாம்பாள் அறக்கட்டளைச் சொற்பொழிவுரை
12. பத்துப்பாட்டு ஆராய்ச்சி — டாக்டர் இராசமாணிக்கனார்
13. பதினெண் சித்தர் ஞானக்கோவை
14. அரிச்சந்திர புராணச் சுருக்கம்

எனப் பல இலக்கிய நூல்களையும் அகராதியையும் பதிப்பித்தார்.

நற்றமிழறிஞராய், நல்லாசிரியராய், சொற்பொழிவாளராய்ப் புகழொடு பொலிந்த மே. வீ. வே. சிறந்த நூலாசிரியராகவும் திகழ்ந்தார். 1. துருவன், 2. விமலன், 3. குணசாகரர் (அ) இன்சொல் இயல்பு, 4. பத்திராயி (அ) ஆட்சிக்குரியோன், 5. அலாவுதீனும் அற்புத விளக்கும், 6. பொது நலப் புரவலர், 7. திருக்கண்ணபிரானார், 8. இளங்கோவன் (அ) தவளை மலைச் சுரங்கம், 9. குணவீர சிகாமணி, 10. அரபிக் கதைகள், 11. கம்பராமாயண வசனங்கள்- 4 பகுதிகள் ஆகிய நூல்களை மே.வீ.வே. இயற்றினார். மே. வீ. வே. அவர்கள் நிகழ்த்திய ஆய்வுகளில் 1. நாலடியார்—நக்கீரர், 2. செல்லச்சொன்னான் செல்லசொன்னான், 3. ஆய், ஆக, 4. வேண்டா, 5. விகுதிப் புணர்ச்சி (நாள்கள், கோள்கள்), 6. அழைக்கப்படுதல், 7. ஆனை (பாடநூல்), 8. 'அன்னொடு' 'ஆர்' (வரதராசர், விசுவநாதர், அன்பழகர்) என்பவை குறிப்பிடத்தக்க ஆய்வுகளாகும்.

ஒல்லும் வகையெல்லாம் ஓயாத தமிழ்த் தொண்டாற்றிய மே.வீ.வே. அவர்கள் மேற்கொண்டிருந்த தமிழ்த் தொடர்பான பணிப் பொறுப்புகள் பலவாகும்.

1. அரசு இலக்கிய, இலக்கணப் பாடநூல்களின் தலைமைப் பதிப்பாசிரியர்.

2. சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி திருத்தக் குழுத் தலைமைப் பதிப்பாசிரியர்.

3. சென்னைப் பல்கலைக் கழகத் திருவாய்மொழி ஈட்டின் தமிழாக்கம் (வித்துவான் புரா. புருஷோத்தம நாயுடு) 10 தொகுதிகள் - பதிப்பாசிரியர்.

4. சென்னைப் பல்கலைக் கழகத்தில் சொர்ணாம்பாள் அறக்கட்டளையின் சார்பில் நிகழ்ந்த திருக்குறள் தொடர்பான சொற்பொழிவுகளின் ஆங்கிலக் கட்டுரைகளின் பதிப்பாசிரியர்.

5. அண்ணாமலைப் பல்கலைக் கழகக் கம்பராமாயணப் பதிப்புக் குழு உறுப்பினர்.

6. தமிழகப் புலவர் குழுத் தலைவர்.

7. வைணவ மகா சங்கத்தின் தலைவர்.

8. புரசைச் சுந்தரர் இரவுத் தமிழ்க் கல்லூரி முதல்வர்.

எனப் பலபெரும் பொறுப்புகளை ஏற்றவர் மே.வீ.வே. அவர்கள். ஏற்ற பொறுப்பையெல்லாம் ஏற்றமுறச் செய்தார் எனில் அது மிகையன்று.

இத்தகு தொண்டுகளால் உயர்ந்த மே. வீ. வே. அவர்கள் காஞ்சீபுரத்தில் வாழ்ந்த காலத்தில் மணிவிழா நடைபெற்றது. அம்மணிவிழாவில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் அற்றைநாள் துணைவேந்தர் திரு. டி. என். நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் தலைமையேற்றிருக்க, தமிழவேள் பி. டி. ராஜன் அவர்கள் 'மீனாட்சி கருணையைப் பொன்னாடையாகப் போர்த்துகிறேன்' எனக் கூறி மே. வீ. வே. அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்துப் பாராட்டினர். இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகரும் இவ்விழாவில் கலந்துகொண்டு மே. வீ. வே. அவர்களைப் பாராட்டினார்.

மே. வீ. வே. அவர்களை மக்களுள் உயர்ந்தோர் 'மகாவித்துவான்' எனப் போற்றினர். தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள் 'சிந்தாமணிச் செல்வர்' எனப் பாராட்டினார். மே. வீ. வே. அவர்கள் கூத்த நூலைப் பதிப்பித்தளித்தமையைப் பாராட்டி இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' பட்டம் வழங்கியது. அன்னைத் தமிழிலக்கிய மன்றம் அருந்தமிழ் வளர்த்த மே. வீ. வே. அவர்களுக்கு 'இலக்கணத் தாத்தா' என்னும் பட்டம் வழங்கிப் பாராட்டியது. அமெரிக்க உறவு பூண்ட பல்கலைக் கழகம் 1981இல் மே. வீ. வே. அவர்களுககு 'டாக்டர்' பட்டம் வழங்கியது. மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம் 'பேரவைச் செம்மல்' எனப் பட்டம் வழங்கிப் போற்றியது. மே. வீ. வே. அவர்களின் 76 ஆவது பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்ட தமிழகத்தின் அற்றைநாள் மேதகு ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் 'தமிழ்க் குரு' எனப் பாராட்டினார். ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் அற்றைநாள் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் மே. வீ. வே. அவர்களுக்குப் பத்தாயிரம் உருபாய் அடங்கிய பொற்கிழி அளித்தும், பொன்னாடை போர்த்தியும் பாராட்டினார்.

மே.வீ.வே. அவர்களின் நினைவாக அறிஞர் கமில் சுவலபெல் அவர்களின் முயற்சியால் மேற்கு ஜெர்மனியில் கோல்ன் கழகச் சார்பில் நூலகம் ஒன்று நிறுவப்பெற்றுள்ளது. இவ்வாறு அயல் நாட்டினர் மெச்சும் அறிஞர் பெருந்தகையாய்த் திகழ்ந்தவர் மே.வீ.வே. அவர்கள்.

செந்தமிழ்க் களஞ்சியமாய், செந்தமிழை உயர்த்தித் தாமுயர்ந்த தகவாளராய், அறிஞர்கள் போற்றிய அறிஞராய் நாளும் தமிழ்த் தொண்டாற்றி நானிலம் போற்ற வாழ்ந்த தமிழ்ப் பெருந்தகை மே. வீ. வே. அவர்கள் 4-2-1985 இல் தைப்பூசத் திருநாளில் காலை 4 மணிக்குப் புகழுடம்பெய்தினார்.

'வாழ்க மே. வீ. வே. அவர்களின் புகழ்'!

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.